/02

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணித் தேர்வு, ஆண்டு – III, 2019.

## நிருவாகச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 07

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. நியாயாதிக்கத்திற்குப் புறம்பாக எடுக்கப்படும் நிர்வாக நடவடிக்கைகளை கேள்விக்குட்படுத்த புதிதாக எழுந்துள்ள பல காரணங்கள் உள்ள போதிலும், வலுவிகழ்தற் கோட்பாடே அத்தகைய நடவடிக்கைகளை மீளாய்வதில் இன்னும் முக்கிய வகிபங்கினை வகிக்கின்றது. வலுவிகழ்தற் கோட்பாடானது சிக்கலான ஆனால் செழிப்பான கோட்பாடெக் கூறப்படினும், நீதித்துறை பிணக்குக்குட்பட்ட நிருவாக நடவடிக்கைகளை மீளாய்வதற்கு இக்கோட்பாட்டினையே பரந்தளவில் பிரயோகித்து வருகின்றது.

   மேலுள்ள கூற்றானது வலுவிகழ்தற் கோட்பாட்டின் தன்மை மற்றும் நோக்கெல்லையினை சரியாக பிரதிபலிக்கின்றதா? பொருத்தமான தீர்ப்புச்சட்ட ஆதாரங்களை ஆதாரங்காட்டி இலங்கையில் தற்போதைய சட்ட நிலைமையினை ஆராய்க. உமது விடைக்கான காரணங்களை தருக.

2. தேசிய சுற்றாடற் சட்டத்தின்படி, சுற்றாடல் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் எந்தவொரு கட்டுமான கருத்திட்டமும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA) வழங்கப்படும் சுற்றாடற் தாக்க உரிமத்தினைப் (EIL) பெறாது ஆரம்பிக்கப்பட முடியாது. இச்சட்டத்தின்படி, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) பணிப்பாளர் நாயகம் (DG) சுற்றாடற் தாக்க உரிமத்தினை வழங்க அல்லது நிராகரிக்க பிரத்தியேக தத்துவங்களைக் கொண்டுள்ளமையோடு, சுற்றாடற் தாக்க உரிமம் மீதான பணிப்பாளர் நாயகத்தின்

அத்தகைய தீர்மானம் எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படுத்தப்படவும் முடியாது. சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) தற்போதைய பணிப்பாளர் நாயகமான சுமணா, இவ்விடயம் தொடர்பான தனது அதிகாரங்களை சுற்றாடல் அதிகாரசபையின் (CEA) விடயம்சார் எழுதுவினைஞரான (subject clerk) பெரேரா என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். தொழில் முயற்சியாண்மையாளரான ஆகாஷ் என்பவர், கட்டுமானக் கருத்திட்டம் ஒன்றினை ஆரம்பிப்பதற்காக, மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம்(CEA) உரிமத்தினைக் கோரி சுற்றாடற் தாக்க உரிமத்திற்கான ஒரு விண்ணப்பத்தினை சமர்ப்பித்த பொழுது, ஆகாஷின் விண்ணப்பத்தினை பெரேரா நிராகரித்தார். அதே காலப்பகுதியில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (CEA) வேறு இரு சுற்றாடற் தாக்க உரிம (EIL) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதே கிளையின் மற்றுமொரு எழுதுவினைஞரான .'.பெர்னான்டோ என்பவர் தனக்கு தனிப்பட்ட ரீதியில் முன் கூட்டியே அறிமுகமான கட்டுமான ஒப்பந்தக்காரர் ஒருவரான பாஷானா என்பவருக்கு சுற்றாடல் தாக்க உரிமத்தினை வழங்கினார். வீடமைப்பு அமைச்சும் அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள கருத்திட்டம் ஒன்றுக்காக சுற்றாடல் தாக்க உரிம விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்திருந்ததுடன், சுமணா அக்கருத்திட்டத்தின் விவரங்களை ஆராயாது அமைச்சுக்கு உடனடியாகவே உரிமத்தினை வழங்கினார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மேற்போந்த தீர்மானங்களின் சட்டத்தன்மையினைப் பொருத்தமான கோட்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி ஆராய்க.

3. நிருவாக நடவடிக்கைகளை, பரந்த பொருளில், மேலும் முன்னேற்றகரமாக மீளாய்வதற்கான புதிய விதிகளை விகிதாசாரத்துவ (proportionality) கோட்பாடானது வழங்குகின்றது. விகிதாசாரத்துவ கோட்பாட்டின் அறிமுகத்துடன் அறிவார்த்தமின்மை (irrationality) மற்றும் நியாயமின்மை (unreasonableness) என்ற போட்பாடுகளின் முக்கியத்துவமானது கணிசமான அளவில் குறைந்துவிட்டதாகச் சில அறிஞர்கள் வாதிடுகிறார்கள்.

   நிருவாகச் சட்ட விடயப்பரப்பிலான அண்மைய வளர்ச்சிகளுடன் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றினை மதிப்பிடுக. உங்கள் விடையினைத் தீர்ப்பு சட்ட ஆதாரங்களினால் ஆதாரப்படுத்துக.

4. அப்புஹாமி என்பவன் அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்ட ஒரு காணியான சின்னக்கரவத்த என்பதில் பயிர் செய்துக் கொண்டிருக்கின்றான். சின்னக்கரவத்தயின்

எல்லையில் அமைந்துள்ள சுபத்திராராம கோவிலின் தலைமை மதகுரு, சின்னக்கரவத்தயினை தனது கோவில் காணியுடன் இணைக்க விரும்பினார். பத்து வருட குத்தகைக் கால இறுதியில், அப்புஹாமி பிரதேச செயலாளரிடம் அதன் புதுப்பித்தலுக்காக விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பித்தாரெனினும் பதுப்பிக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கையைப் பெறுவதற்கு முன்னர் அவர் இறந்துவிட்டார். அப்புஹாமியின் மகனான ஜயந்த என்பவன் தனது தந்தையின் குத்தகையினைத் தனக்கு மாற்றிக் கொடுக்குமாறு கோரிக்கை விடுக்க பிரதேச செயலாளரை அணுகியபோது, குத்தகை உடன்படிக்கையில் அப்புஹாமியின் பெயரை வெட்டி நீக்கி ஜயந்தவின் பெயரை அதில் எழுதியதன் மூலம் பிரதேச செயலாளர் குத்தகையினை அவனுக்கு வழங்கினார். தலைமை மதகுருவின் செல்வாக்கின் காரணமாக, சின்னக்கரவத்தையினை சுபத்திராராம கோவிலிடம் ஒப்படைக்க வேண்டுமென மாகாண காணி ஆணையாளருக்கு மாகாண அமைச்சர் கட்டளையிட்டார். அதன்பின்னர், ஜயந்தவுடனான குத்தகை உடண்படிக்கையினை இரத்துச் செய்யுமாறு மாகாண காணி ஆணையாளர் பிரதேச செயளாலருக்கு அறிவுறுத்தினார். பின்னதாக, பிரதேச செயலாளர், குத்தகை உடண்படிக்கையினை இரத்துச் செய்ததோடு ஒரு நபருடன் ஆரம்பத்தில் செய்யப்பட்ட குத்தகை உடண்படிக்கை ஒன்று அவரின் மறைவுக்குப் பின்னர் புதுப்பிக்கப்படக் கூடியதல்ல என்றும் ஜயந்தவிற்கு அறிவித்தார்.

அந்த அதிகாரிகளின் தீர்மானத்தினை கேள்விக்குட்படுத்த ஜயந்த விரும்புகிறார். பொருத்தமான சட்டக் கோட்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்தினதும் பிண்ணனியில் அவருக்கு ஆலோசனை வழங்குக.

5. பௌத்த சிறுபான்மைக் குழுவின் உறுப்பினரான பானுக என்பவன் கர்ப்பமான தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் அரசியல் புகலிடம் கோரி வங்காளதேசத்திலிருந்து இலங்கையை 2010 மார்ச்சில் வந்தடைந்தான். விடயப் பொறுப்பான அமைச்சர், தொடர்புடைய சட்டவாக்கத்தின் கீழ் தன்னுடைய அதிகாரங்களைப் பிரயோகித்து, பானுகவின் குடும்பத்திற்கு ஐந்து வருடங்களுக்கு தற்காலிக வதிவிட விசா ஒன்றினை அவருடைய அகதி விண்ணப்பத்தில் ஓர் இறுதி தீர்மானத்தினை UNHCR எடுக்கும் வரையில் வழங்கினார். இதற்கிடையில், பானுகவுக்கு இலங்கையில் ஒரு குழந்தை பிறந்தது. UNHCR க்குச் செய்யப்பட்ட பானுகவின் அகதி விண்ணப்பம் நிலுவையில் இருக்கையில், அவனுடைய விசாவானது இன்னுமொரு ஐந்து வருடங்களுக்கு 2015இல் புதுப்பிக்கப்பட்டது. 500 வங்காளதேச பௌத்த அகதிகளுக்கு நிரந்தர வதிவிடம் வழங்கவும் இலங்கையில் பிறந்த அவர்களுடைய குழந்தைகளுக்கு இலங்கைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்க முடியுமெனவும் அமைச்சரால் தீர்மானமெடுக்கப்பட்டிருந்ததாக 2016 இல் அறிவிக்கப்பட்டது. பின்னர், அமைச்சரவை

மறுசீரமைப்புடன், புதிய அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டார். சம்பந்தப்படும் செலவுகள் காரணமாகவும் அகதிகள் மத்தியில் பதுங்கியிருக்கும் 'பயங்கரவாதிகள்' குறித்த அபாயம் காரணமாகவும் வங்காளதேச அகதிகளுக்கு இந்நாட்டில் வதிவிடமோ அல்லது பிரஜாவுரிமையோ வழங்கப்பட மாட்டாதென புதிய அமைச்சர் 30 ஜுன் 2019 அன்று அறிவித்தார். பானுகவின் குடும்பம் நாடு கடத்தப்படுவதற்கான அறிவிப்பு ஒன்றைப் பெற்றுள்ளது.

பானுகவின் குடும்பமானது நிவாரணங்களை நாடுவதற்கான ஏதுக்கள் குறித்ததான உமது புரிதலினை எடுத்தியம்புவதற்கென நிருவாகச்சட்ட கோட்பாடுகள் மற்றும் பொருத்தமான வழக்குகளை ஆராய்க.

6. நிருவாக நடவடிக்கைகள் அடிப்படை உரிமைகளுடன், குறிப்பாக அரசியலமைப்பின் உறுப்புரை 12(1) உடன், முரண்படக்கூடாதென மிக அண்மைக்காலமாக நீதிமன்றங்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளன. தத்துவமானது நியாயமாகவும் பாரபட்சமின்றியும் பிரயோகிக்கப்பட வேண்டுமென்றும் அவ்வகையில், அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சமத்துவத்திற்கான அடிப்படை உரிமையினை மீறக்கூடாது என்றும் உயர் நீதிமன்றம் கருத்துக் கூறியுள்ளது. இந்தப் பொருள்கோடலின் விளைவாக, அடிப்படை உரிமைகள், விசேடமாக சமத்துவத்துக்கான மற்றும் சமமான பாதுகாப்பிற்கான உரிமையானது அதன் அனைத்து பொருள் மயக்கத்துடனும், எழுத்தாணை விண்ணப்பம் ஒன்றில் மீளாய்விற்கான ஓர் மேலதிக ஏதுவாக எழுந்து வருகின்றது.

உரிமைகளின் மீறுகை நிருவாக நடவடிக்கைகளை மீளாய்வதற்கான ஓர் ஏதுவாக எவ்விதம் வந்துள்ளது என்பதை மேலுள்ள கூற்றின் பின்னணியில் ஆராய்க. பொருத்தமான கருத்தேற்புக்கள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் மீதான உமது புரிதலினால் உமது விடையை ஆதாரபடுத்துக.

7. 'இறைமையானது மக்களுக்குரியதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் உள்ளதென அரசியலமைப்பானது பிரகடனம் செய்கின்றது. பிரதிநிதித்துவ ஜனநாயகமொன்றாக இருப்பதனால், மக்களின் தத்துவங்கள், அப்போதைக்கென குறிப்பிட்ட சில பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நபர்களினூடாகப் பிரயோகிக்கப்படுகின்றது.'

*Bulankulama and Others v. Secretary, Ministry of Industrial Development and Others* ([2000] 3 Sri LR. 243 at p.245 ).

பகிரங்க நம்பிக்கைக் கோட்பாடானது எங்ஙனம் இலங்கையினுடைய நீதிமுறை விடயப்பரப்பில் பொது நலன்களைப் பாதுகாப்பதற்கான ஒரு கருவியாக வளர்ந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதனூடாக மேலுள்ள கூற்றின் மீது கருத்துரைக்க.

***